9th August 1966]

திரு. எம். எஸ். செல்வராஜன் : கப்பற் பொறியியல் கல்லூரி நிறுவ உத்தேசமாக எவ்வளவு செலவிடப்பட வேண்டியதிருக்கும் என்று அரசாங்கம் பரிசீலனை செய்திருக்கிறதா ? என்ஜினியரிங் கல்லூரி நிறுவும்போது ஒரு பகுதியாக இத்தகைய பொறியியல் கல்லூரியையும் வைத்துக்கொள்வது என்பது சர்க்கார் ஆலோசனையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனிக்கேள்வி வேண்டும்.

பொற்கொல்லர்கள்

*260 **கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பொற்கொல்லர்களுக்கு, தொழில் செய்வதற்காக வழங்கப்பட்ட கடன்களுள், தொழிலை மாற்றிக் கொண்டதன் காரணமாக பணத்தைத் திரும்பக் கட்டுமாறு எத்தனை பேர்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது ?

(இ) பெற்ற கடன் தொகையை மாற்றிக்கொண்ட தொழிலுக்கே கொடுத்ததாக பாவிக்கும் உத்தேசம் அரசாங்கத்தின் பரிசிலனையிலுள்ளதா ?

(உ) இல்லையெனில், பல தவணைகளில் வசூலிக்க ஏற்பாடு செய்யும் உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Eight persons.

(*b*) No; Sir.

(*c*) Loans which are not utilised for the specific purpose for which they were sanctioned will be foreclosed and the entire dues to Government are liable to be summarily recovered in such cases.

திரு. வை. சங்கரன் : விலைவாசி காலநிலை காரணமாக இந்தக் கடன் தொகையிலிருந்து எடுத்து வேறு தவறுகச் செலவழித்து விடவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இன்றைக்கு இருக்கின்ற நிலைமையை அனுசரித்து, இப்படிப்பட்டவர்களுக்கு ஏதாவது சலுகை அளிக்க சர்க்கார் முன் வருமா ? 9-00 a.m.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நிலைமை எவ்வளவு தான் கெட்டுப்போயிருந்தாலும், ஒரு தொழிலுக்கு என்று கடன் வாங்கி அதை வேறு விதமாகச் செலவு செய்வது என்பது சர்க்கார் ஏற்றுக் கொள்ள முடியாத விஷயம்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சார், ஆரம்ப காலத்தில் குறிப்பிட்ட தொழிலுக்கு என்று கடனை வாங்கி, பின்னால் வேறு ஒரு தொழிலுக்கு உபயோகித்தால், கடன் வாங்கிய முழு தொகையையும் ஏக காலத்தில் திருப்பிக் கட்டவேண்டும் என்ற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலைமையை மாற்றி கடன் தொகையை தவணைகளாக திருப்பி செலுத்தலாம் என்றும், வேறு தொழிலுக்கு மாற்றிக்கொள்ளலாம் என்ற நிலைமையை ஏற்படுத்துவதற்கு சர்க்கார் உத்தேசிக்குமா ?

[9th August 1966

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்பு ஒரு முறை விடை அளித்திருக்கிறேன். ஒரு தொழிலுக்கு வாங்கிய கடனை வேறு தொழிலுக்கு உபயோகித்துக்கொள்ளவேண்டும் என்றால், அதற்கு அரசாங்கத்தின் அங்கிகாரம் பெற்றுக்கொள்ளவேண்டும். அரசாங் கத்தின் அங்கிகாரம் பெறாமல் வைப்பதாக இருந்தால் வாங்கிய கடன் முழுவதையும் திருப்பிக்கொடுத்துவிடவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

அரிசனங்களுக்கு பஸ் உரிமம்

*261 **கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்** : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

தமிழகத்தில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பத்தி லிருந்து இதுவரைக்கும் அரிஜனங்களுக்கு கூட்டுறவு முறையில் கூட்டுறவு முறை இல்லாமல் கொடுக்கப்பட்டுள்ள பஸ் ரூட்டுகள், முறையே எத்தனை, மாவட்டவாரியாக ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A statement[a] is placed on the Table of the House.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் 12 மாவட்டங்கள் இருக்கின்றன. அதில் கோயம் புத்தூர், வட ஆற்காடு, திருநெல்வேலி இந்த மூன்று மாவட்டங் களிலும் தான் கூட்டுறவு முறையில் பஸ் ரூட் பெர்மிட் கொடுக் கப்பட்டிருக்கிறது. மற்ற மாவட்டங்களிலிருந்து அரிஜனங்கள் கூட்டுறவு முறையில் பஸ் சர்விஸ் நடத்துவதற்கு முன் வரவில்லையா, அல்லது பஸ் ரூட் கேட்டு அரசாங்கத்தால் கொடுக்கப்பட வில்லையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது இருக்கின்ற சட்டப் படி ஒரு சிலருக்குத்தான் கொடுக்கலாம் என்று முடிவு செய்வதற் கில்லை. மத்திய அரசாங்கத்தினிடம் இதைப்பற்றி தெரிவிக்கப் பட்டிருக்கிறது. இது மத்திய அரசாங்கத்தின் சட்டம், இதை எந்த முறையில் திருத்தலாம் என்று பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இப்போ துள்ள சட்டத்தில் இடமில்லையென்றாலும், இனிமேல் திருத்தப் படுவதில், அரிஜனங்களுக்கு பெர்மிட் கொடுப்பதற்கு தனியாக இடம் பெறுமா ? இதன் அடிப்படையில் விதிமுறை செய்யப் படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சட்டத்தை எப்படி மாற்றி அமைப்பது என்பதில் அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டிருக் கிறது. 100-ல் பத்து விதம் அதிகப்படுத்துவதாக இருந்தால், அதை அரிஜனங்களுக்கு என்று எப்படி ப்ரிஃபரன்ஸ் கொடுப்பது என்பதைப்பற்றியும் பரிசீலனை செய்யப்பட்டுவருகிறது.

திரு. து. ப. அழகமுத்து : சார், மற்ற இலாகாக்களில் எல்லாம் அரிஜனங்களுக்கு சலுகை காட்டுவது போல், பஸ் ரூட் பெர்மிட் கொடுப்பதிலும் அரிஜனங்கள் அப்ளிகேஷன் செய்திருந்தால், இதில்

[a] Printed as Appendix III on pages 989-990.